# இனிய உதயம்

தமிழில் முதல் முயற்சி

4-11 ரூ 10



நாஞ்சில் நாடனுட
கலந்துரையாடல்



உலகின்
தலைசிறந்த
10 நாவல்களில்
ஒன்று

# திமிங்கில வேட்டை

## ஹெர்மன் மெல்வின்

தமிழாக்கம் : ஜெகாதா

தமிழுக்கு ஏற்றமான காலம் இது. தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்து கிடைத்திருக்கிறது! இப்போது தமிழ் இலக்கியத்தில் தகுதிமிக்க படைப்பாளி ஜெயகாந்தன் அவர்களுக்கு இந்திய அரசு இலக்கியத்துக்காக வழங்கும் மிக உயரிய விருதான 'ஞானபீடம்' விருது வழங்கிக் கௌரவித்திருக்கிறது!

இந்த மகிழ்ச்சிகரமான வேளையில், ஜெயகாந்தன் அவர்களுக்கு 'இனிய உதயம்' தனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது!

பலருக்கு விருதுகளால்தான் பெருமை! சிலரால் அந்த விருதுகளுக்குப் பெருமை வரும்! 'ஞானபீடம்' தன்னைப் பெருமைப்படுத்திக் கொண்டிருக்கிறது!

ஜெயகாந்தன் அவர்களுக்குப் பல எழுத்தாளர்களுக்கு இல்லாத தனிப்பெரும் சிறப்பொன்று உண்டு! எழுத்துக்கு ஒரு முகம், வாழ்க்கைக்கு ஒரு முகம் என்றிருப்போர்க்கு மத்தியில், தனது படைப்பைப் போலவே வாழ்க்கையிலும் நடக்கிற ஒருமுக மனிதர் ஜெயகாந்தன்!

ஜெயகாந்தனைக் காட்டி முண்டாசுக் கவிஞன் பாரதியை இந்தத் தலைமுறைக்கு அறிமுகப் படுத்தலாம்! அப்படியோர் கம்பீரம் தோற்றத்திலும் செயலிலும்!

எழுதுவதற்கு- அதுவும் கால வெள்ளத்தில் கரைந்து போகாமல் சிரஞ்சீவியாய் வாழும் இலக்கியம் எழுதுவதற்கு எத்தனை மனத் திண்மை வேண்டுமோ- அதே



# பெருமை பெற்றது ஞானபீடம்!



உலகின்
தலைசிறந்த
10 நாவல்களில்
ஒன்று

# திமிங்கில வேட்டை

ஹெர்மன் மெல்வின்

தமிழாக்கம் : ஜெகாதா

# ஜெ.கே. பற்றி எழுத்தாளர்கள்...